# விஜயபாரதம்

28.08.2020 மலர் - 1, இதழ் - 145 VIJAYABHARATHAM DAILY

மின்னனு தின இதழ் (தனிச்சுற்று)


## வணக்கம்

## தேர்வு விஷயத்தில் தலையீடு வேண்டாமே !



காங்கிரஸ் தலைமை பதவிக்கு நிரந்தரமான தலைவர் வேண்டி மூத்த தலைவர்கள் போர்க்கொடி தூக்கிய நிலையில் தனது இருப்பையும் பதவியும் தக்க வைத்துக்கொள்ள அனைத்து எதிர்க்கட்சி முதல்வர்களை சேர்த்து ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தி உள்ளார் சோனியா காந்தி.

இந்த கூட்டத்தில் மத்திய பாஜக அரசு மாநிலங்களின் உரிமையை பறிப்பதாகவும். JEE/NEET போன்ற தகுதி தேர்வுகளை தள்ளி வைக்கக்கோரிய போதிலும் விடப்பிடியாக தேர்வுகளை நடத்துவதில் மும்முரமாக இருப்பது போன்ற பிரச்சினைகளை உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க உள்ளதாக தெரிவித்தள்ளது.

எற்கனவே உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டு உச்சநீதிமன்றமே தேர்வுகள் விஷயத்தில் எதற்கும் விலக்கு அளிக்க முடியாது என்று தீர்ப்பில் சொல்லிட்ட பிறகும் வழக்கு தொடர முயல்வது. யாரை ஏமற்ற என்பது தான் புரியவில்லை. எற்கனவே தமிழகத்தில் இதுபோன்று வழக்கு இழுத்தடிக்கப்பட்டு மாணவர்கள் கடைசிவரை தேர்வு இல்லை என்று நம்பி. அனிதா என்ற மாணவியை இழந்தது தான் மிச்சம். வேறு எதுவும் நடைபெறவில்லை. எனவே தேர்வு விசயத்தில் எதிர்கட்சிகள் குழப்பம் விளைவிக்காது இருந்தாலே போதும். அறிவித்த ஒரே நாளில் 14 லட்சம் மாணவர்கள் HALL TICKET பதிவிறக்கம் செய்த்திலிருந்தே மாணவர்கள் தேர்வுக்கு தயாராக இருக்கிறார்கள் என்பது புரிந்துவிட்டது. யாரை ஏமாற்ற இந்த நாடகம்?

*தனது எடுபிடிகளின் மருத்துவக்கல்லூரியின் நன்மை கருதி இழந்துவிட்ட கொள்ளை லாபத்தை மீண்டும் பெற்றிட மறைமுக திட்டமோ இது என்று எண்ண தோன்றுகிறது.*

# பரதன் பதில்

காங்கிரஸ் கட்சிக்கு சோனியாவே மறுபடியும் இடைகால தலைவராக வந்து உள்ளது பற்றி . . .

மெயிலில் சூர்யா,சென்னை

சோனியாவின் பெருந்தன்மையை நிருபிக்க அளித்த வாய்ப்பை வீணடித்து விட்டு காங்கிரஸ் குடும்ப கட்சி என்பதை மீண்டும் நிருபித்துவிட்டது.

## யாரை காப்பற்ற இந்த தீ விபத்து?



கேரளா முதலமைச்சர் அலுவலகத்திற்கு தங்க கடத்தல் விவாகாரத்தை தேசிய புலனாய்வு அமைப்பு கையில் எடுத்து உள்ளது. இந்த நிலையில் தலைமை செயலகத்தில் இந்த வழக்கின் முக்கிய ஆவணங்கள் இருந்த அறையில் மர்மான முறையில் தீ விபத்து ஏற்பட்டு ஆவணங்கள் தீக்கிறையாகி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பல நூறுகோடி ரூபாய் மதிப்பிலான இந்த முறைகேட்டில் வசமாக சிக்கியுள்ள ஆளுங்கட்சி பிரமுகர்களை தப்பவைப்பதற்கான முயற்சிதான் இந்த தீ விபத்து என்று எண்ண தோன்றுகிறது.

## உலகின் அதிக வேக மனித கால்குலேட்டர்

லண்டனில் நடைபெற்ற உலக அளவிலான மனதில் அதிகவேகமாக கணக்கீடும் போட்டியில் ஹைதாரபாத்தை சேர்ந்த நீலகண்ட பானு பிரகாஷ் வெற்றி பெற்றார். 13 நாடுகளை சேர்ந்த 30 பேர் கலந்து கொண்ட இந்த போட்டியில் வெற்றி பெற்று பாரதத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

'அவரது மூளை ஒரு கால்குலேட்டரின் வேகத்தை விட, விரைவாக கணக்கிடும் திறன் கொண்டது' என தெரிவித்துள்ளது. இந்த சாதனைகளை ஸ்காட் பிளான்ஸ்பர்க் மற்றும் சகுந்தலா தேவி போன்ற கணித மேதைகள் மட்டுமே வைத்திருந்தனர். தற்போது பானு பிரகாஷ் இச்சாதனையை படைத்துள்ளார்.



# தாய்ப்பால் தானம் பெறும் உன்னதம்

அவிநாசியை சேர்ந்த ரூபா என்ற இளம்பெண், 'அமிர்தம் தாய்ப்பால்' என்ற பெயரில், தாய்ப்பால் தானம் பெறுவதை சேவையாகவே செய்ய துவங்கினார்.

கோவையில் உள்ள நிறுவனத்தில் சாப்ட்வேர் இன்ஜினீயராக, பணிபுரிகிறார். இந்த சேவையில் திருப்பூர், கோவை, ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த, 1,000க்கும் மேற்பட்ட தாய்மார்களை தன்னுடன் இணைத்து கொண்டுள்ளார்.

இந்த உன்னத சேவையை செய்து வரும் ரூபா கூறுகையில் பிரசவித்த தாய்மார்கள் தங்கள் குழந்தைக்குப்போக எஞ்சிய தாய்ப்பாலை சேகரித்து, அவரவர் வீடுகளில் உள்ள குளிர்பதன பெட்டியில் வைக்கின்றனர். அவற்றை மாதம் ஒருமுறை சென்று சேகரித்து, கோவை அரசு மருத்துவமனையில் உள்ள தாய்ப்பால் வங்கிக்கு வழங்கி வருகிறேன். அங்கு மருத்துவர்களின் பலகட்ட பரிசோதனைக்கு பின், தாய்ப்பால் தேவைப்படும் பச்சிளம் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.



# இலங்கை வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவுக்கு முன்னுரிமை

இந்தியாவின் பாதுகாப்பு நலனுக்கு ஊறுவிளைவிக்கும் எந்த ஒரு செயலிலும் இலங்கை ஈடுபடாது. குறிப்பாக எந்த ஒரு நாடும் இலங்கை வழியாக இந்தியாவுக்கு எதிரான செயல்களில் ஈடுபட அனுமதிக்கமாட்டோம்.

இலங்கை அம்பாந்தோட துறைமுக பாரமரிப்பு ஒப்பந்தம் முதலில் இந்தியாவிடம் தான் அளிக்கப்பட்டது. இந்தியா அதை ஏற்க மறுத்ததால் சீனாவுக்கு அளிக்கப்பட்டது. அம்பாந்தோட்டா துறைமுகத்தை ராணுவ நடவடிக்கைகளுக்கு சீன பயன்படுத்த முடியாது. கொழும்பு துறைமுக பராமரிப்பு ஒப்பந்தத்தை இந்தியாவுக்கு வழங்க துறைமுக ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். எனினும் அந்த ஒப்பந்தத்தை இந்தியாவுக்கே அதிபர் கோத்தபய ராஜபட்சே அளிப்பார்.

-ஜெயநாத் கொலம்பகே

இலங்கை வெளியுறவுத்துறை செயலாளர்

# விதை ஊன்றியவர்

ஒரு காலக்கட்டத்தில் கிறிஸ்துவ மிஷனிரிகள் ஹிந்து மதத்தை இழித்தும் பழித்தும் பிரச்சாரம் செய்து ஹிந்துக்களை ஏமாற்றி மதமாற்றம் செய்து வந்தனர். இதனால் வேதனை அடைந்த பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியராக இருந்த அளசிங்கப் பெருமாள், இதனை தடுத்து நிறுத்த ஏதாவது செய்ய முடியுமா என்று சிந்தித்தார். அப்போதுதான் அமெரிக்காவின் சிகாகோ நகரில் சர்வ சமய மாநாடு நடைபெற இருக்கிறது என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது.

இந்த மாநாட்டிற்கு ஹிந்து சமயத்தின் சார்பில் யாரையாவது அனுப்ப வேண்டும் என்று அளசிங்கப் பெருமாள் எண்ணினார். அந்த வேளையில்தான் சுவாமி விவேகானந்தர் சென்னைக்கு விஜயம் செய்தார். அளசிங்கப் பெருமாள், சுவாமிஜியை சந்தித்து மாநாடு பற்றிச் சொல்லி மாநாட்டில் பங்கேற்குமாறு வேண்டினார். தேவியின் கட்டளை அதுவானால் அப்படியே நடக்கட்டும் என்று சுவாமிஜி பதில் கூறினார். அந்தக் கூட்டத்திலேயே சுவாமிஜி சிகாகோ செல்வதற்கான நிதியை திரட்டத் துவங்கினார் அளசிங்கப் பெருமாளின் முயற்சியால் சென்னையில் ரூ.4,000/- திரட்டப்பட்டது.



சுவாமிஜிக்குத் தேவையான உடைகள், ஒரு கடிகாரம், விசிட்டிங் கார்டு போன்றவற்றை அளசிங்கப் பெருமாள் தயார் செய்து சுவாமிஜியிடம் அளித்தார். சுவாமிஜி கப்பல் ஏறும் முன், அளசிங்கர் அவரது பாதங்களில் விழுந்து வணங்கினார். சுவாமிஜி அளசிங்கரை அணைத்து தன் அன்பை வெளிப்படுத்தினார்.

*சுவாமிஜி சிகாகோ மாநாட்டில் கலந்து கொண்டது நம் அனைவருக்கும் தெரியும். அதற்கான விதையாக இருந்தவர். நம் அளசிங்க பெருமாள் என்றால் அது மிகையல்ல.*